Kalanjiyam - International Journal of Tamil Studies களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Volume: 4 | Issue 1 | January 2025 | eISSN: 2456-5148

களஞ்சியம் - KALANJIYAM
INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES

‘

# Manikavasaka's Thirukkovai Ecological Events

**Dr.S. Palpandi,**
Assistant Professor, Dept.of Tamil, Facult of Science and Humanities, SRMIST ,Chennai – 600026.
palpands@srmist.edu.in

**Abstract:**

The framework that governs life on any inhabited land is intrinsically self-regulating. In the context of language, particularly, terms like "Addition" and "Punarchi" (which I understand might refer to specific grammatical concepts or linguistic features depending on the original language and context) are subject to precise interpretations within literary and grammatical frameworks. Consider the richness and diversity that emerges when different cultures and communities interact. In places like oases, vast forests, and towering mountains – environments that foster both isolation and congregation – we witness the beautiful phenomenon of individuals from disparate ethnic groups meeting, forming connections, and developing affection for one another, despite their previously unknown existences. This interaction underscores the unifying power of shared humanity and the potential for love and understanding to transcend cultural boundaries. Further, the text alludes to a hierarchical system of belief or importance. The "goddess" is presented as being the primary level, followed by the "ethnic group" as a secondary level, suggesting a structured relationship between deity and community. Finally, the phrase referencing "the ecology of the Thirukovaiyar" and "the life of the small servants of Thillai" points to a specific cultural and geographical context, likely within Tamil Nadu, India. The "Thirukovaiyar" likely refers to a significant Tamil literary work, and "Thillai" alludes to the Chidambaram temple. This segment suggests a focus on the intricate details of this environment, exploring both its environmental dimensions and the lives of ordinary individuals within it. The text appears to be presenting a holistic view encompassing natural regulation, linguistic precision, cultural interaction, spiritual hierarchy, and environmental awareness within a specific cultural landscape..

# மாணிக்கவாசகரின் திருக்கோவையில் சூழியல் நிகழ்வுகள்

முனைவர் சு. பால்பாண்டி
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அறிவியல் மற்றும் மானுடவியல் புலம், எஸ்.ஆர்.எம். நிகர்நிலைப் பல்கலைக்கழகம், சென்னை - 600026*

ஆய்வுச் சுருக்கம்

மானுட பிறப்பில் அற வாழ்வு கொண்;ட ஒவ்வொரு நிலத்தின் திணையமைப்பும,; தொழிலும், இயற்கையாக நெறிப்படுகிறது. இயற்கை மொழியில் கூடுதல், புணர்ச்சி என்னும் சொற்கள் இலக்கிய, இலக்கண வரையறைக்கு உட்படுகிறது. இனக்குழுக் கூட்டத்தில் சோலைகளிலும், வனங்களிலும், மலைகளிலும் மக்கள் முன்பின் அறியாத ஒருவரை ஒருவர் கண்டு அன்பு கூட்டித்தல.; இயற்கையின் களவினமாக முதல் நிலை தெய்வம் எய்தும், இரண்டாம் நிலை இனக்குழு ஆண் பெண்; எய்தும் சூழியலை, தில்லைச் சிற்றம்பலத்து அடியார்களின் வாழ்வின்; பெட்டகமான திருக்கோவையார் சூழியல் நெறிகளை காட்சிப்படுத்துகிறது.

முன்னுரை

காலம் காலமாக மானுடச் சமூகத்தின் அன்பின்நிலை வேறுவேறு வடிவங்களில் படைப்பாக அமைகிறது. தமிழ் இலக்கியத்தின் வளமைகள் குறித்து பேசப்படும் அகத்;தியம், தொல்காப்பியம் தொடங்கி நவீன கவிதை வடிவங்கள் என நீட்சிப் பெற்றுள்ளன. மானுட வாழ்வின் திணை இலக்கியங்கள் நெறிமையாக, காட்சித் திரளாக உலாவுகின்றன. சங்க இலக்கியம், இலக்கணம், அற இலக்கியம், பத்தி இலக்கியம், சிற்றிலக்கியம், உரைநடை, கவிதை, கதை, நாடகம் என இலக்கியம் மானுட வாழ்வின் சத்திகளாக விளங்குகின்றன. பத்தி இலக்கியத்தில் திணை வாழ்வின் நெறிமையில் திருக்கோவையாரில் காணப்படும் இயற்கைச் சூழலின் நிகழ்வுகள் ஆய்வாக வெளிப்படுகிறது.

கருத்துத் திறன் சொற்கள்

பத்தி, அன்பு, இயற்கை, திணை, புணர்ச்சி, இன்பம், துறை, களவு, தில்லை, சிற்றம்பலம் வல்லிக்கொடி, ஒளிர், அல்குல், தாமரை, கோங்கு, கனங்குழை என கருத்துப் பிழிவாக பல சொற்கள் பதிவாக்கப்படுகிறது.

ஆய்வு நோக்கம்

வரலாற்று ஆய்வுகளில் தமிழர்களின் இனக்குழு சமுதாயத்தின் திணை இலக்கிய வாழ்வியல் உந்துச் சத்தியாக அமைகின்றன. கடற்கரை நாகரிகத் தோற்றத்தில் கீழ்த்திசை பண்பாட்டு வாழ்வின் அடையாள நகரச் சிறப்பில் இலெமூரியா வரலாறும் தொன்மைச் சான்றாக அமைகிறது. தொல்பழங்குடியின் சமூக வாழ்வில் பத்தியின் கட்டமைப்பும் மக்களை நெறிப்படுத்தும் இலக்கிய அக ஒழுகலாறுகளை இறை வாழ்வியலோடு திணை வாழ்வியலை ஆய்கிறது.

தொல் பழங்குடியின் மக்கள் வாழ்வை திணை இலக்கியங்கள் வரைமுறை செய்கின்றன. நிலம், ஒழுக்கம், தொழில், பொழுது என திணை வாழ்வியல் அகம், புறம் வெளிப்படும். களவு, கற்பு வாழ்வில் பாலின உறவுகளின் பங்கு இயற்கையான சூழலில் இறையன்பும் கொண்டு மிளிர்கின்றன. அக வாழ்வில் களவும் கற்பும் அன்பின் இயல்புணர்வின் நிகழ்வோடு தலைவன் தலைவி கூட்டுவித்தாற்போல இறைவனும் அன்பரும் கூடுதல் ஒருமைத்தாகும். களவியல் வாழ்வில் அன்பை வெளிப்படுத்தும் காரணச்

செயலில் தெய்வமும் தலைவியும் குறிப்பிடப்படுகிறது.

‘ பேரின்பக் கிளவி
இயற்கைப் புணர்ச்சி துறையீ றொன்பதும்
சத்திநி பாத மொத்திடுங் காலத்து
உத்தம சற்குரு தரிசன மாகும்’

எனத் தெய்வ நிலையில், இயற்கைப் புணர்ச்சி ‘காட்சி, ஐயம், தெளிதல், நயப்பு, உட்கோள், தெய்வத்தை மகிழ்தல், புணர்ச்சி துணிதல், கலவியுரைத்தல், இருவயினொத்தல், கிளவிவேட்டல், நலம்புனைந்துரைத்தல், பிளீவுணர்த்தல், பருவரலறிதல், அருட்குணமுரைத்தல், இடமணித்துக் கூறி வற்புறுத்தல், ஆடிடத்துய்த்தல், அருமையறிதல், பாங்கியையறிதல்’ என்னும் முறைமைகளில் இறைவனை அடைவதாக மாணிக்கவாசகர் குறிப்பிடுகிறார்.

சங்ககால வாழ்வில் ஆண் ஒரு பெண்ணை கூடுவதற்கு ‘தெய்வத்தால் எய்தல் - கலந்து மகிழ்தல், அழகினைப் பாராட்டல், ஏற்ற அணிகளை அணிதல் என்றும், தலைவியால் எய்தல் - இரந்துபின் நிற்றற்கு எண்ணல், இரந்து பின்னிலை நிற்றல், முன்னிலையாக்கல், மெய் தொட்டுப் பயிறல், பொய் பாராட்டல், இடம் பெற்றுத் தழால், வழிபாடு மறுத்தல், இடையூறு கிளத்தல், நீடு நினைந்து இரங்கல், மறுத்து எதிர்கோடல்,

வறிதுநகை தோற்றல், முறுவல் குறிப்பு உணர்தல், முயங்குதல் உறுத்தல், புணர்ச்சியின் மகிழ்தல் ' என்றெல்லாம் வழிமுறைகளாக தொல்காப்பியத்தில் சுட்டப்படுகிறது என்பர் ஆய்வாளர்கள்.

'திருவளர் தாமரை சீர்வளர் காவிக ளீசர்தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தள்கொண் டோங்குதெய்வ
மருவளர் மாலையொர் வல்லியி னொல்கியன நடைவாய்ந்து
உருவளர் காமன்றன் வென்றிக் கொடிபோன் றொளிர்கின்றதே'
வளம் பெருகி இருக்கக் கூடிய தில்லை சோலையின் காட்சியை மணிவாசகர் குறிப்பிடுகிறார்.

'இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கில்
காமக் கூட்டம் காணுங் காலை
மறைஓர் தேஎத்து மன்றல் எட்டனுள்
துறையமை நல்லியாழ்த் துணைமையோர் இயல்பே' (தொல்.பொருள்.களவு.1)
தொல்காப்பியர் மக்களின் நிலம் சார்ந்த திணை வாழ்க்கையில் அன்பு கூடுதல் எண் வகைகளாக களவில் வரையறுத்துள்ளார்.

'இவனிவ ளைம்பால் பற்றவும் இவளிவன்
புன்தலை ஓரி வாங்குநள் பரியவும்
காதற் செவிலியர் தவிர்ப்பவுந் தவிராது
ஏதில் சிறுசெரு உறுப மன்னோ
நல்லிமன் றம்ம பாலே மெல்லியல்
துணைமலர்ப் பிணையல் அன்னவிவர்
மணமகி ழியற்கை காட்டி யோயே' (குறுந்.229)
பாலின உறவில் ஏற்பட்ட தடைகள் அன்பின்பால் பிணைப்பு ஏற்பட்டு ஆண் பெண் மன மகிழ்வை இயற்கை கூட்டித்துவிடுகிறதை குறுந்தொகை உணர்த்துகிறது.

'போதா விசும்போ புனலோ பணிக ளதுபதியோ
யாதோ வறிகுவ தேது மரிதி யமன்விடுத்த
தூதோ வனங்கன் றுணையோ விணையிலி தொல்லைத்தில்லை
மாதோ மடமயி லோவென நின்றவர் வாழ்பதியே'
அன்பினால் கூடும் இடத்தின் உண்மைத் தன்மை அறிவதில் மயங்குதல் தௌ;ளிதின் அறிவாகும்.

'சிறந்துழி ஐயஞ் சிறந்த தென்ப
இழிந்துழி யிழிபே சுட்ட லான' (தொல்.பொருள்.களவு.3)

'அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் னெஞ்சு' (குறள்.1081)
கண்ட காட்சிப் பொருளை அணுகும் காரணத்தினால் தெளிதலுண்டு.

'பாயும் விடையான் தில்லையன் னாள்படைக் கண்ணிமைக்குந்
தோயு நிலத்தடி தூமலர் வாடுந் துயரமெய்தி
ஆயும் மனனே யணங்கல்ல ளம்மா முலைசுமந்து
தேயு மருங்குற் பெரும்பணைத் தோளிச் சிறுநுதலே'

அன்பின் விருப்பினால் ஒருவருக்கொருவர் மெய்யுணர்தல் செயல்பாடுகளில் ஈடுபடுவதை மாணிக்கவாசகர் விளக்குகிறார்.

'வண்டே இழையே வள்ளி பூவே
கண்ணே அலமரல் இமைப்பே அச்சமென்று
அன்னவை பிறவும் ஆங்கவண் நிகழ
நின்றவை களையுங் கருவி யென்ப' (தொல்.பொருள்.களவு.4)
அன்பினால் அச்சங்கள் களையப்படுகிறதை தொல்காப்பியர் சான்றுரைக்கிறார்.

'திருநுதல் வேரரும்புந் தேங்கோதை வாடும்
இருநிலஞ் சேவடியுந் தோயும் - அரிபரந்த
போகிதழ் உண்கணு மிமைக்கும்
ஆகு மற்றிவள் அகலிடத் தணங்கே' (புற.வெண்.கைக்.3)

'கோடல் எதிர்முகைப் பசுவீ முல்லை
நாறிதழ்க் குவளையோ டிடைப்பட விரைஇ
ஐதுதொடை மாண்ட கோதை போல
நறிய நல்லோள் மேனி
முறியினும் வாயது முயங்கற்கும் இனிதே' (குறுந்.62)

'தம்மில் இருந்து தமதுபாத் துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு' (குறள்.1107)

'சொற்பா லமுதிவள் யான்சுவை யென்னத் துணிந்திங்ஙனே
நற்பால் வினைத்தெய்வந் தந்தின்று நானிவ ளாம்பகுதிப்
பொற்பா ரறிவார் புலியூர்ப் புனிதன் பொதியில்வெற்பில்
கற்பா வியவரை வாய்க்கடி தோட்;;;ட களவகத்தே'
துணிந்து அன்பை வெளிக்காட்டும் இடமாக களவினை மணிவாசகர் அணுக்கப்படுத்துகிறார்.

'சிந்தா மணிதெண் கடலமிர் தந்தில்லை யானருளால்
வந்தா லிகழப் படுமே மடமான் விழிமயிலே
அந்தா மரையன்ன மேநின்னை யானகன் றாற்றுவனோ
சிந்தா குலமுற்றென் னோவென்னை வாட்டந் திருத்துவதே'

'அணிபல் அன்ன கொங்குமுதிர் முண்டகத்து
மணிக்கே ழன்ன மாநீர்ச் சேர்ப்ப
இம்மை மாறி மறுமை யாயினும்
நீயா கியரெங் கணவனை
யானா கியர்நின் னெஞ்சுநேர் பவளே' (குறுந்.49).
அன்பின் மிகுதியால் பிரிவின் இடைநிற்றலுமுண்டு என்பதை வலியுறுத்தப்படுகிறது.

'கோங்கிற் பொலியரும் பேய்கொங்கை பங்கன் குறுகலரூர்
தீங்கிற் புகச்செற்ற கொற்றவன் சிற்றம் பலமனையாள்
நீங்கிற் புணர்வரி தென்றோ நெடிதிங்ங னேயிருந்தால்
ஆங்கிற் பழியா மெனவோ அறியே னயர்கின்றதே'

'அம்மெல் ஓதி விம்முற் றழுங்கல்
எம்மலை வாழ்ந ரிரும்புனம் படுக்கிய
அரந்தின் கவியறுத் துறுத்த சாந்தநும்
பரந்தேந் தல்குல் திருந்துதழை யுதவும்
பண்பிற் றென்ப வண்மை அதனால்
பல்கால் வந்துநம் பருவரல்தீர
அல்கலும் பொருந்துவ மாகலின்
ஒல்கா வாழ்க்கைத் தாகுமென் உயிரே' (தொல்.பொருள்.2)
அன்பின் பிரிவுக் காலமாக தொல்காப்பியம் வலியுறுத்துகிறது.
'புணர்ப்போன் நிலனும் விசும்பும் பொருப்புந்தன் பூங்கழலின்
துணர்ப்போ தெனக்கணி யாக்குந்தொல் லோன்தில்லைச் சூழ்பொழில்வாய்
இணர்ப்போ தணிகுழ லேழைதன் னீர்மையிந் நீர்மையென்றாற்
புணர்ப்போ கனவோ பிறிதோ அறியேன் புகுந்ததுவே'

'பூவிடைப் படினும் யாண்டு கழிந்தன்ன
நீருறை மகன்றில் புணர்ச்சி போலப்
பிரிவரி தாகிய தண்டாக் காமமோடு
உடனுயிர் போகுக தில்ல கடனறிந்து
இருவேம் ஆகிய வுலகத்து
ஒருவே மாகிய புன்மைநாம் உயற்கே' (குறுந்.57)

'குவளை நாறுந் குவையிருங் கூந்தல்
ஆம்பல் நாறுந் தேம்பொதி துவர்வாய்க்
குண்டுநீர்த் தாமரைக் கொங்கின் அன்ன
நுண்பஃறுத்தி மாஅ யோயே
நீயே, அஞ்ச லென்றவன் சொல்லஞ் சலையே
யானே, குறுங்கால் அன்னங் குவவுமணற் சேக்குங்
கடல்சூழ் மண்டிலம் பெறினும்
விடல்சூ ழிலன்யான் நின்னுடை நட்பே' (குறுந்.300)

'யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீ+யும் எவ்வழி யறிதுஞ்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே' (குறுந்.40)

உலகம் கடலாலும் விண்ணாலும் புணர்க்கப்பட்டிருப்பதை, நிலத்தினும் விண்ணினும் மலையினும் உறைந்திருக்கும் இறைவன் பழமை தில்லைச் சோலையில் காட்சிக் கொண்டு அடியார்களின் அன்பினை உணர்த்தும் சிற்றம்பலத்தனாக நிலைகொண்டதை மணிவாசகர் படைப்பிலக்கியத்தில் சூழியல் காட்சியாக விளக்குகிறார் எனலாம்.
முடிவாக,

KALANJIYAM

சங்க இலக்கிய மக்களின் வாழ்வியல் போன்று இவ்வுலகம் இறைவன் அன்பால் கட்டப்பட்டிருப்பதை, மாணிக்கவாசகர் நாயகி நாயகன் பாவனையில் அன்பின் கூட்டித்தல் சூழியல் காட்சியோடு விளக்கியுள்ளார். மனித சமூக வாழ்வில் அன்பின் சிறப்பினை சுற்றுச்சூழல் முன்னிலைப்படுத்துகிறது. தொல்காப்பியர் வரையறை தந்த பொருள்களில் நிலமும், கருப்பொருளும,; அன்பின் திணைப் பொருளும் கொண்ட தில்லைச் சமூக இனக்குழு வாழ்வில் இடம்பெற்ற சிற்றம்பலத்தானின் வாழ்வியல் தரவுகளாக கோவையாக பாடப்பெற்றுள்ளது.

பார்வை,

1. இன்பத் தமிழ் வேதம், மு.பெ.சத்தியவேல் முருகனார், தெய்வத்தமிழ் அறக்கட்டளை பதிப்பகம், சென்னை – 32
2. தொல்காப்பியம் பொருளதிகாரம், நச்சினார்க்கினியர் உரை, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 1

. This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.